# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW16

| | | | |
|---|---|---|---|
| Name | : அமுதா | Caste | : |
| W/o. | : சேகர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 19.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 present. A2 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் கொண்டலாம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கட்டிட கடக்கால் வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.15 என் கணவர். 22.12.2014ம் தேதி என் மகனும் மருமகளும் ராசிபுரம் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் TN 30–2166 என்ற வாகனத்தில் ஆதார் கார்ட் எடுப்பதற்காக சென்றார்கள்.அவர்களுடன் என் பேத்தி தனலட்சுமியும் சென்றார். அவர்கள் ரோட்டின் இடது ஓரமாக சென்றார்கள். அப்போது சந்தியூர் ஆட்டையாம்பட்டியில் மணல் லாரி ஒரு பேருந்தின் மீது மோதி அதன்பின்னர் ஓரமாக சென்று கொண்டிருந்த என் மகன், மருமகள்

பேத்தி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. என் மகனும், மருமகளும் அதே இடத்தில் இறந்துவிட்டதாகவும் என் பேத்தி மீது மணல் கொட்டிவிட்டதாகவும் அவரை அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது போகும் வழியில் இறந்துவிட்டதாக என் கணவருக்கு தகவல் வந்தது. உடனே நானும் என் கணவரும் விபத்து நடந்த இடத்திற்கு சென்றோம். விபத்து நடந்த இடத்தில் என் மகனும் மருமகளும் லாரிக்கு அடியில் இறந்துகிடந்தார்கள். என் பேத்தியை மணலுக்கு அடியில் இருந்து எடுத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ஆனால் என் பேத்தி கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டார். நானும் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு என் பேத்தியின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து கொடுத்தார்கள். போலிசார் என்னை அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். விபத்து நடந்த இடத்திலும் விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சம்மந்தமாக மல்லூர் காவல்நிலையத்திற்கு எத்தனை முறை சென்றேன் என்றால் நானும் என் கணவரும் பலமுறை சென்றிருக்கிறோம். அவ்வாறு போகும்போது போலிசார் என்னிடம் எத்தனை கையெழுத்துகள் வாங்கினார்கள் என்றால் 2,3 கையெழுத்துகள் வாங்கியிருப்பார்கள்.

2ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.